பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 07 2026 THURSDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) நாட்டில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களின் பயன்களை பெற்று வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

2) பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின்கீழ், மக்களுக்கான திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

4) நடந்தாய் வாழி காவிரித் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுமாறு தவெக அரசை, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

5) 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில், இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

நாட்டில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களின் பயன்களை பெற்று வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் சீரிய வழிகாட்டுதல் காரணமாக, கடந்த 2015-ஆம் ஆண்டு 19 சதவீதம் பேர் சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்களை பெற்று வந்ததாகவும், தற்போது நடப்பாண்டில் 68 புள்ளி நான்கு சதவீதம் பேர் திட்டப்பயன்களை பெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

அனைவர் முயற்சியிலும், அனைவருக்குமான வளர்ச்சி என்ற மத்திய அரசின் தாரக மந்திரத்தை பிரதிபலிக்கும் வகையில், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மூலம், நிதி பாதுகாப்பு, சுகாதாரம், உணவு தானிய உதவி போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இத்திட்டங்களின் பயனாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதாகவும், வறுமைக்கோட்டிற்கு கீழ் இருந்த மக்களின் வாழ்க்கை மேம்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நலன் மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தோடு சமூக பாதுகாப்புத் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்படுத்தி வருவதாகவும் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின்கீழ், மக்கள் நலத்திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

வடசென்னை பெரியார் நகரில் அஞ்சலக பாஸ்போர்ட் அலுவலகத்தை இன்று தாம் திறந்துவைத்தது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் எல். முருகன், மத்திய அரசின் சேவைகள் வெளிப்படைத் தன்மையுடன், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைத்து வருவதாக கூறியுள்ளார்.

திட்டங்களின் பயன்களை, விரைவாகவும் எளிதாகவும் மக்கள் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள அஞ்சலக பாஸ்போர்ட சேவையின் மூலம் வடசென்னை, சுற்று வட்டார மக்களுக்கு பாஸ்போர்ட் சேவைகள் எளிதாக கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அனைவருக்கும் தரமான வெளிப்படையான மற்றும் அணுகக்கூடிய சேவைகளை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

சென்னை  தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மாநில அமைச்சர்கள் மற்றும் தலைமைச்செயலாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

சென்னையை சேர்ந்த மீன்பிடி படகுகள் ஆந்திர கடற்பகுதியில் சுமூகமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆந்திர அரசுடன் ஒருங்கிணைந்து தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில மீன்வளத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மீன்வளத்துறை இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த மீனவர்கள் ஆந்திரப்பிரதேச கடல்பகுதியில் மீன்பிடிப்பதால், அப்பகுதியில்

மீன்வளம் குறையும் என்ற அச்சம் ஆந்திர மாநில மீனவர்களிடையே உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தீர்வுகாணும் முயற்சியாக சென்னை மீன்பிடி படகு உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இருமாநில அதிகாரிகள் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்கூட்டத்தை விரைந்து நடத்துவதற்கான முயற்சி மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மாநில மீன்வளம், நிதித்துறை அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சென்னை மீன்பிடி உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேச மாநிலத்திற்கு அதிகாரிகளை அனுப்பி, சுமூகமான மீன்பிடிப்புக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 11-ஆம் தேதி நடைபெற்ற தமிழ்நாடு — ஆந்திர மாநிலங்களுக்கு இடையிலான கூட்டத்தில், இதுகுறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும என்று வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மீனவர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில்கொண்டு வழக்கம்போல் ஆந்திர மாநில கடற்பகுதிக்குள் மீன்பிடிக்க அனுமதிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மீன்வளத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

கடந்த அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நடந்தாய் வாழி காவிரித் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுமாறு தவெக அரசை, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்தை மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையிலேயே இந்த திட்டம் அப்போது சேர்க்கப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

மத்திய அரசின் ஆலோசனைப்படி முதல் கட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திமுக ஆட்சியில் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள திரு

எடப்பாடி பழனிசாமி, மத்திய அரசின் அனுமதி கிடைத்த உடனேயே நடந்தாய் வாழி காவிரித் திட்டம் தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு, மாநிலத்தில் ஆளும் தவெக அரசு, மத்திய அரசின் துணையோடு உடனடியாக திட்டத்தை தொடங்கி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் வரும் **20-**ஆம் தேதிவரை லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 42 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திரு வைத்திநாதன் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

----------

திருப்பத்தூர் மாவட்டத்தில், ஷெல்யூட்டு மற்றும் பழங்குடியின சிறந்த எழுத்தாளர்களுக்கான உதவித்தொகையை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திரு ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

-------------------

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான அனைத்துத்துறை அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-------------------

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆடி முளைக்கொட்டு திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலமாக இன்று தொடங்கியது.

--------------

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகராட்சியில் மாதவரம் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மாநகராட்சி ஆணையர் டாக்டர் சமீரன் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா **2** தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஜகார்தாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில் விஷ்வநாத் சுரேஷும், **55** கிலோ எடைப்பிரிவில் கங்காவும் தங்கப்பதக்கம் வென்றனர்.

**65** கிலோ எடைப்பிரிவில் **Vanshaj** வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

**70** கிலோ எடைப்பிரிவில் **Hitesh**-ம், **75** கிலோ எடைப்பிரிவில் நீரஜ்ஜும், **90** கிலோ எடைப்பிரிவில் **Ishan Kataria**-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

--------------

இந்தியா — இலங்கை இடையேயான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

**Galle**-ல் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் **576** ரன் எடுத்தது.

இலங்கை முதல் இன்னங்சில் **9** விக்கெட் இழப்பிற்கு **424** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

**நான்காவது மற்றும் இறுதி நாளான இன்று இலங்கை இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 178 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை டிக்ளர் செய்தது.**

**<<<<<<END>>>>>>**